DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. CC. No. 133/2025

Deposition of PW5/ LW9

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கோதண்டராமன் |
| Father's Name | : | காமாட்சி |
| Village | : | இராயப்பன்பட்டி |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | காவல் சார்பு ஆய்வாளர் |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of October 2025

எதிரி ஆஜர்.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

1. நான் தற்போது இராயப்பன்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.07.2023 ஆம் தேதி 21.30 மணிக்கு நான் சின்னமனூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்தபோது சின்னமனூர் அரசு மருத்துவமனையிலிருந்து வந்த தகவலை பெற்று அங்கு சென்று விசாரித்தபோது காயம்பட்ட நபர் தேனி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றுவிட்டார். எனவே அங்கு சென்று விசாரித்தபோது காயம்பட்ட நபர் அங்கிருந்து மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு சென்றுவிட்டு விபரம் தெரிந்து அங்கு சென்று காயம்பட்ட நபரின் தம்பி சுப்பிரமணி என்பவர் கொடுத்த புகாரை பெற்று பின்னர் நிலையம் வந்து பார்வையிட்டு அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.306/2023 இ.த.ச பிரிவுகள் 279, 337 வழக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.** பின்னர் வழக்கை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு 15.07.2023 ம் தேதி 07.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கார்மேகம், மகாராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம்**

**முறையே அ.சா.ஆ.4 மற்றும் 5 ஆகும்.**

2. பின்னர் சாட்சிகள் சுப்ரமணி, திவாகர், நாகராஜ், கார்மேகம், மகாராஜன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலத்தை பதிவு செய்தேன். இவ்வழக்கின் காயம்பட்டு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த தவமணி த/பெ. கருப்பையா என்பவர் சிகிச்சை பலனின்றி 15.07.2023ம் தேதி இறந்து விட்ட தகவல் கிடைக்கப்பெற்று வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.சவிலிருந்து 279, 304(A) இ.த.ச வாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்.** பின்னர் சாட்சி சுப்ரமணி, திவாகர், ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) 15.07.2023ம் தேதி மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை பிணைவறையில் வைத்து வழக்கில் இறந்துபோன தவமணி என்பவரது பிரேதத்தின் மீது காலை 08.00 மணி முதல் 10.00 மணி பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்.** பின்னர் இறப்பின் காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய பிரேதத்தை தலைமை காவலர் ராஜேந்திர பிரசாத் அவர்களிடம் ஒப்படைத்தேன். வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை</u>

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2025.10.16 18:39:57 +0530

Judicial Magistrate, Fast Track Court (M.L)
Uthamapalayam